**இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் 2010**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை அரச மருந்தாக்கல் உறபத்திக் கூட்டுத்தாபனம் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை அரச மருந்தாக்கல் உறபத்திக் கூட்டுத்தாபனத்தின் நிலைவரத்தையும், அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 3 க்கமைய ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ரூபா 173,452,035 பெறுமதியுடைய குறுகிய கால முதலீடானது நடைமுறை அலலாத சொத்துக்களாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வர்த்தகக் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டுள்ள உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியேற்பாட்டுக் கணக்கின் பெறுமதி ரூபா 219,549 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ள பின்வரும் குறைபாடுகள்**

(i) வருமான வரியாக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 62,571,066 எனக் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டபோதும் உள்ளபடியான கொடுப்பனவு ரூபா 62,381,313 ஆகும்.

(ii) குறுகிய கால முதலீடாக ஆண்டின்போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 3,473,008,635 மற்றும் ஆண்டின்போது மீளெடுக்கப்பட்ட ரூபா 3,431,273,592 முதலீட்டுத் தொகை என்பன வெவ்வேறாகக் காட்டப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கெனக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணமாகிய ரூபா 3,608,104 நிதிசார் கூற்றுக்களில் வேறாகக் காட்டப்படாது கடன்பட்டோர் கட்டுப்பாடுப் பொது என்பதன் பெறுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) காலம் முடிவடைந்த இரு மருந்துகளின் பெறுமதியாகிய ரூபா 224,212 பதிவழிக்கப்படுவதற்குப் பதிலாக விற்பனை ஆகு செலவின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக, விற்பனை செய்யப்பட்ட பொருட்களது ஆகுசெலவு கூடுதலாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

---------------------------------------------

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மருந்துகள் விற்பனையாளர்கள் ஆகியோரிடமிருந்து பெறவேண்டிய முறையே ரூபா 880,332 ரூபா 64,487 என்பன 7 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் மீளாய்வாண்டு முடிவு வரை அறவிடப்படாதிருந்தன.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 5,748,845 பெறுமதியுடைய குத்தகைக் காணிக்கான உரித்துறுதி அல்லது குத்தகை உடன்படிக்கை, CAWRI 1009/2007 ஆம் இலக்க வழக்குடன் தொடர்புடைய கோவை, ரூபா 13,700,573 சீராக்கல் கணக்குகளுக்குரிய தகவல்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச் சான்றுகள் போன்றன சமர்ப்பிக்கப்படாமையால் இவ் விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 2000 ஜனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | உழைக்கும் போதே செலுத்தும் வரியை ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டுமாயினும் கூட்டுத்தாபன நிதியிலிருந்து ரூபா 1,279,741 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 ஜனவரி 4 ஆந் திகதிய சீஎஸ்ஏ/vii/40 ஆம் இலக்க சனாதிபதியின் சுற்றறிக்கை | வாகனத்திற்கு உரித்துடைய ஏனைய உத்தியோகத்தர்களின் பொருட்டு கொள்வனவு செய்யப்படக்கூடிய வாகனம் ஒன்றினது பெறுமதி ரூபா 2,500,000 ஆகும். எனினும், அத் தொகை ரூபா 440,000 அதிகரிக்கும் வண்ணம் ரூபா 2,940,000 க்கு மைக்ரோ வகை வாகனம் ஒன்றைக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்திருந்தது. |
| (இ) | 2009 ஜூன் 1 ஆந் திகதிய 34(1) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளது ஊழியர்களது படி அதிகரிக்கப்பட வேண்டுமாயின் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அதற்கு முரணாக, கீழே குறிப்பிட்டவாறு ஒருங்கிணைந்த படி |

கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

| **சுற்றறிக்கைப் பிரகாரம் உரித்துடைய படி** | **பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின்படி கொடுப்பனவு செய்யப்பட்ட படி** |
|---|---|
| ரூபா | ரூபா |
| 350 | 700 |
| 400 | 800 |
| 500 | 1,000 |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் விளைந்த வரிக்கு முன்னரான மொத்த இலாபம் ரூபா 292,317,025 ஆகும். அதனை முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான ரூபா 151,827,962 நிகர இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 140,489,063 அதிகரிப்பு தென்படுகின்றது. எவ்வாறாயினும், திறைசேரிப் பிணை முறிகளின் மீது பெறப்பட்ட ரூபா 30,080,514 வட்டி வருவாயையும் உள்ளடக்கிய செயற்பாடு அல்லாத வருவாயாகிய ரூபா 30,752,598 ஐக் கணிப்பிடுவதற்கு முன்னர் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் பெற்ற நிகர இலாபம் ரூபா 261,564,427 ஆகும். முன்னைய ஆண்டிற்கான செயற்பாடு அல்லாத வருமானமாகிய ரூபா 33,479,027 ஐக் கணக்கிலெடுப்பதற்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 118,348,934 ஆகும். இதனால் நிகர இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 143,215,493 ஆகும். மீளாய்வாண்டில் மொத்த இலாபம் ரூபா 128,635,106 அதிகரித்தமையும் பிற செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 20,982,203 குறைவுற்றமையும் இவ்வதிகரிப்புக்குக் காரணமாகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 விற்பனை நடவடிக்கைகள்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் மாத்திரைகள் மற்றும் கப்சூல்களின் விற்பனை பின்வருமாறு அமையும்.

| | 2010 | | 2009 | |
|---|---|---|---|---|
| | அலகுகள் (மில்) | ரூபா (மில்) | அலகுகள் (மில்) | ரூபா (மில்) |
| அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் | 77.685 | 57.874 | 47.310 | 33.619 |
| சுகாதார சேவைகள் பணிப்பாளர் | 967.262 | 868.828 | 601.149 | 732.138 |
| விநியோகத்தர் | 528.170 | 439.610 | 469.478 | 363.341 |
| ஏற்றுமதி | 40.991 | 13.339 | 66.180 | 23.586 |
| | 1,614.108 | 1,379.652 | 1,184,117 | 1,152.684 |

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ஔடத விற்பனை 36.31% அலகுகளால் அதிகரித்துள்ளன.

ii. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2010 ஆம் ஆண்டின் விற்பனை 19.69% அதிகரித்திருந்தது. மொத்த விற்பனையில் 62.97% சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கான விற்பனை ஆகும். மேலும், 5 ஔடதங்களின் விலை 05% - 41% வரையான அதிகரிப்புக்குள்ளாகின.

iii. மீளாய்வாண்டினது ஏற்றுமதி விற்பனை குறைவடைந்திருந்தது.

iv. ஔடதங்களின் விலைகளை நிர்ணயிக்கையில் வைத்திய வழங்கற் பிரிவுக்கு வழங்கப்படும் ஔடதங்களுக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து

சலுகை விலையில் ஔடதங்களை வழங்கவேண்டும். எனினும், கூட்டுத்தாபனம் பல்வேறு கழிவுச் சலுகைகளை வழங்கி வைத்திய வழங்கற் பிரிவுக்கான விலையிலும் குறைந்த விலைக்கு விநியோகத்தர்களுக்கு ஔடதங்களை விற்பனை செய்திருந்தது.

v. 2009 கூறு விலைகள் மற்றும் 2010 கூறு விலைகள் என்பவற்றின் கீழ் பெரசிடமோல் மாத்திரை விற்பனை செய்கையில் முறையே 41% மற்றும் 36.04% இலாப எல்லையும் மெட்போமின் மாத்திரைக்கு 2010 ஆம் ஆண்டிற்கென 21.2% கூடிய இலாப எல்லையும் கொண்டதாக தனியார் பிரிவிற்கான விலையிலும் கூடிய விலையில் மருத்துவ வழங்கற் பிரிவுக்கு ஔடதங்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

vi. விலையை நிர்ணயிக்கும் குழுவினது அங்கீகாரத்துடன், பணத்தைச் செலுத்துவதிலான தாமதத்தையும் கருத்திற்கொண்டு 5 முதல் 10 சதவீத வட்டி மற்றும் இலாப எல்லை 5 சதவீதத்தையும் உள்ளடக்கி மருத்துவ வழங்கல் பிரிவுக்கு வழங்கப்பட்ட ஔடதங்களுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

vii. மருத்துவ வழங்கல் பிரிவு அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபத்திற்கு வழங்கிய கட்டளைகளில் 2009 ஆம் ஆண்டிற்கெனப் பெறப்பட்ட 571.50 மில்லியன் அலகுகளில் 299.54 மில்லியன் கூறுகளும் 2010 ஆம் ஆண்டிற்கெனப் பெறப்பட்ட 885.8 மில்லியன் அலகுகளில் 528.587 மில்லியன் அலகுகளும் இதுவரை வழங்கப்படாதிருந்தன.

### 2.2.2 உற்பத்தி நடவடிக்கைகள்

2006 முதல் 2010 வரையான காலப்பகுதியின்போது உற்பத்தியினது நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஆண்டு | உற்பத்தி (அலகுகள் - மில்லியனில்) | முன்னைய ஆண்டுடனான உற்பத்தி வேறுபாட்டு மாற்றம் - (%) | வேலைச் சுற்று எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2006 | 752.93 | - | 1 |
| 2007 | 1,025.69 | 36.27 | 2 |
| 2008 | 1,032.55 | 0.66 | 2 |
| 2009 | 1,195.20 | 15.75 | 2 |
| 2010 | 1,614.11 | 35.04 | 2 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு உற்பத்தியில் 35.04% அதிகரிப்பு தென்படுகின்றது.

### 2.3 செயற்திறன்

i. கீழே குறிப்பிட்டவாறு, 2005 முதல் 2010 வரை ஔடதங்களின் மொத்த உற்பத்தியில் வருடாந்த அதிகரிப்பு காணப்படவில்லை.

| ஆண்டு | உற்பத்திப் பிரிவின் தகவல்களுக்கமைய உற்பத்தி செய்யப்பட்ட ஔடத வகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 47 |
| 2007 | 43 |
| 2008 | 39 |
| 2009 | 38 |
| 2010 | 38 |

ii. **ISO 9000-2000 தரநிர்ணயச் சான்றிதழைப் பெறுதல்**

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு முடிவிலும் கூட்டுத்தாபனத்திற்கு ISO தரநிர்ணயச் சான்றிதழ் வழங்கப்படாதிருந்தது.

## 2.4 இனங்காணப்பட்ட இழப்புகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 353,862 க்கான மூலப் பொருட் கையிருப்பானது காலங் கடந்துவிட்டமையால் அவை நிராகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) பொதியிலடைத்தலுக்கான மூலப் பொருட்களின் நிராகரிக்கப்பட்ட கையிருப்புப் பெறுமதி ரூபா 157,685 ஆகும்.

(இ) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களது நிராகரிக்கப்பட்ட கையிருப்புப் பெறுமதி ரூபா 463,119 ஆகும்.

(ஈ) நடைபெறும் வேலைகளது நிராகரிக்கப்பட்ட கையிருப்புப் பெறுமதி ரூபா 481,299 ஆகும்.

## 2.5 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

கூட்டுத்தாபனத்தில் ரூபா 13,744,174 செலவில் நிறுவப்பட்டுள்ள கைத்தொழில் வளத்திட்டமிடல் முறைமை கணனி மென் அணி மூலம் கூட்டுத்தாபனத்தின் கையிருப்புக் கட்டுப்பாடு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் முறைப்படி கணக்கிலிடப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

---------------------------------------------------------

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது புலனாகியது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே காணப்படும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. காலங்கடந்த ஔடதக் கையிருப்பு

ii. வாகனப் பாவனை

iii. கணக்கீட்டுக் கணனி மென் அணிப்பாவனை